விகாரி ஹூ வைகாசி மீ
மே - ஜூன் 2019

மலர்: 2
இதழ்: 2

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





வஸந்த உத்ஸவம் - ஆஸ்தானம்

விகாரி ஸூ வைகாசி மீ
மே - ஜூன் 2019

ஸ்ரீ:

மலர்: 2
இதழ்: 2

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri Rajagopalan Madhavan, Sri Sudhakar Thirumalai & Sri P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



From
SRI KARYAM
**SRI AHOBILA MATH**
ஸ்ரீ அஹோபில மடம்



॥ श्रीमते श्रीलक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ॥
श्रीमत श्रीवण्शठकोप श्रीरङ्गनाथ यतीन्द्र महादेशिकाय नमः ॥



HH 46th Jeer

அகலகில்லேன் என்றுறையும் அலர்மேல் மங்கையும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனும் நித்யவாஸம் செய்தருளும் திருமயிலையில் உள்ள ஸ்ரீவேதாந்ததேஶிகன் ஸந்நிதியிலிருந்து சுமார் ஒருவடத்திற்கு முன் ஸம்ப்ரதாய அபிவ்ருத்திக்காக தொடங்கப்பட்ட **"ஸ்ரீதேஶிக ஸந்தேஶம்"** பத்ரிகை தற்போது ஒரு வருடத்தை பூர்த்தி செய்து அனைவராலும் பாராட்டப்பட்டும், ஸம்ப்ரதாயத்திற்கு உயர்ந்த கைங்கர்யம் செய்து வருவதை கேட்டு ஸ்ரீமதழகியசிங்கர் மிகவும் ஸந்தோஷித்தாயிற்று. இக்கைங்கர்யம் மேலும் மேலும் வ்ருத்தி அடையவேணுமாயும், இக்கைங்ர்யத்தை மிகஶ்ரத்தையுடன் செய்துவரும் மயிலாப்பூர் ஸ்ரீவேதாந்ததேஶிகர் தேவஸ்தான ட்ரஸ்டிகள், மற்றும் ஆசிரியர் குழுவினர் அனைவருக்கும் ஸகல ஸௌபாக்யங்களும் ஏற்பட ஸ்ரீமாலோலனை ப்ரார்த்தித்து அநுக்ரஹித்தாயிற்று.

முகாம் : சேலையூர் *( கி. தாம்பரம் )*

நாள் : விகாரி சித்திரை திருவாதிரை *( 9.05.2019 )*

இந்தப்படி ஸ்ரீநியமநம்

பருத்திப்பட்டு வங்கீபுரம் தேவனார்விளாகம்

ஸ்ரீகார்யம், ஸ்ரீஅஹோபில மடம்

**Central Office:** 'Sri Desika Bhavanam', 30, Venkatesa Agraharam, Mylapore, Chennai - 600 004. Tel: 044-2461 1540

ஸ்ரீ:







|| श्रीः ||

Srimathe Srinivasa Gopala Mahadesikaya Nama :
Srimathe Raghuveera Mahadesikaya Nama :
Srimathe Gopaladesika Mahadesikaya Nama : Srimathe Srinivasa Mahadesikaya Nama :
Sriranga Divya Thampathipyam Nama :

## SRIMAD ANDAVAN POUNDARIKAPURAM SWAMY ASRAMAM

43-A/13, Asramam Road, Srirangam - 620 006.
Phone : 0431 - 2436100
E-mail : srinidhi1921@gmail.com

ஸ்ரீ

Date : ..........................

ஸ்ரீமதே ரகுவீர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே கோபாலதேசிக மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹோதேசிகாய நம:
ஸ்ரீமத்ப்ய: நிகமாந்த ராமானுஜ, யாமுன, நாத,
சடகோப, மஹாதேசிகப்யோ நம:
ஸ்ரீரெங்கநாயிகா ஸமதே ரங்கநாத ப்ரப்ரஹ்மணே நம:

“உளன் கண்டாய் நன்னெஞ்சே! உத்தமன் என்றும்
உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்
வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்.”

திருமயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்த்தான பத்தியிக்கையான “தேசிக ஸந்தேசம்” முதலாம் ஆண்டு பூர்த்தியடைவதை கேள்வியுற்று மிகவும் ஸந்துஷ்டி ஆனோம். குன்ற மேந்தி குளிர்மழை காத்தவன் அனுக்கிரஹத்துடன் வெளிவரும் இப்பத்திரிக்கை காளமேகமாய் ஆழ்வார் ஆச்சார்யர்களின் பகவத் அனுபவத்தை வர்ஷித்து தேசிக ஸம்பரதாயத்தை தளிர்விக்கிறது. இப்பத்திரிக்கை தாள் பரப்பிய மண்தாவிய ஈசனின் கீர்த்தி போல் பல்லாண்டு பல்லாண்டு செழிக்க வேணுமாய் தேவஸ்தான நிர்வாகிகளும், உறுப்பினர்களும் பத்திரிக்கை ஆசிரியர் குழாம் மற்றும் கைங்கரியபரார்களுக்கும் ஆயுள் ஆரோக்கியத்தோடு கைங்கர்யங்களை செவ்வன சிறக்க பண்ணும் ஸ்திதியையும் பெரிய பெருமாள் பெரிய பிராட்டியார் திருவடிவாரங்களையும், பூர்வாச்சார்யர்களின் திருவடித்தாமரை வாரங்களிலும் ப்ரார்தித்து மங்களாசாசனம் பண்ணுகிறோம்.

நாராயண நாராயண நாராயண

ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^3$ரி ஸமம் ஸ்தா$^2$நம் ப்$^3$ரஹ்மாண்டே$^3$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^3$வோ ந பூ$^4$தோ ந ப$^4$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

'சைத்ர ஶ்ரீமாந் அயம் மாஸ:' – சித்திரை மாதம் சுபம் நிறைந்தது – என்றான் தசரதன். இது உலகத்தோர் அனைவர்க்கும் பொதுவானது. வேங்கடத்தைப் பதியாக வாழும் வைணவர்க்கு இதில் ஒரு விசேஷம் உண்டு; அதுதான், வேதாந்த தேசிகனை வ்யாஜமாக்கி இத்திருத்தலத்தில் வாழ்வோர்க்கு அருள்புரிய எண்ணி மாமயிலையில் வேங்கடவன் அர்ச்சா ரூபமாக அவதரித்த மாதம் என்பது. இத் திங்களில் ஒரு அத்தத்தில் (ஹஸ்தத்தின்), பத்தாநாள் தோன்றிய திருவேங்கடவன் (ஸ்ரீநிவாஸனின் திருநக்ஷத்ரம் ச்ரவணம் என்பது குறிப்பிடத்தக்கது) ஆவிர்ப்பவித்தான். ஆம், இன்றைக்கு சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன் அவதரித்த மாதம் இது. ஆக ஸ்ரீநிவாஸன் அவதரித்த மாதம் ஸ்ரீமானாக ஆவதில் என்ன ஆச்சர்யம். இவ் வைபவத்தின் ஒளிப்பதிவுக் காட்சிகளை இவ்விதழில் ஸேவித்து இன்புறலாம்.

இத்துடன், இங்கு கீழே குறிப்பிடப்படும் விழாக்கள் சார்ந்த சில காட்சிகளின் புகைப்படங்களையும் அனுபவிக்கலாம்:

- ✓ விகாரி வருடப் பிறப்பு
- ✓ ஸ்ரீராமநவமி
- ✓ சித்ரா பௌர்ணமி
- ✓ புதியதாய் நிர்மாணித்த கங்கைகொண்டான் மண்டபத்தின் தி(சி)றப்புவிழா
- ✓ மழைதரும் மஹாத்மாக்கள் – உபந்யாஸம்
- ✓ அக்ஷய த்ருதீயை
- ✓ ஸ்ரீபாஷ்யகாரர் வார்ஷிகோத்ஸவம்
- ✓ வஸந்த உத்ஸவம்

கண்ணுக்கு விருந்தை அடுத்து, கருத்துக்கு உணவாம் கட்டுரைப் பகுதியில் :

- ❖ சடகோப வைபவம்
- ❖ பறவையேறு பரம்புருடன்
- ❖ ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதகைங்கர்யக்குழுவின் தோற்றமும் தொண்டும்
- ❖ வழக்கமான சிறுவர் பகுதி

இவைகளும் இடம்பெறும்.

இப்படி முதலாம் ஆண்டு நிறைவை விண்ணப்பித்து நிற்கையிலே, பெரியதொரு ஸ்ரீமத்வம் நம்மேல் விழப்பெற்றோம் – நம் தேசிக ஸம்ப்ரதாய ஸ்தாபனங்களான ஸ்ரீமதஹோபிலமடம் / ஸ்ரீபௌண்டரீகபுரம் ஆச்ரமங்களினின்றும் திவ்யாநுக்ரஹ ஸ்ரீமுகம் கிடைக்கப்பெற்றோம். ப்ரக்ருதம் ஆசார்யர்களின் திருப் பாதங்களில் நம்முடைய ஸஹஸ்ர ப்ரணாமங்களை ஸமர்ப்பிக்கிறோம்.

கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு இன்புறலாம் வாரீர்!

ஸ்ரீ:

# OF WELLS AND NOT SO WELLS

FROM THE DESK OF TRUSTEES

Looking back, we hope the one year of publication of 'Desika Sandesam' would have given enormous Santhosham (happiness) to one and all without any Sandeham (doubt). It is heartening to note that the monthly magazine has been widely read and well received by the devotees/readers as evidenced by the positive feedbacks we are getting on the subject.

The write-ups on the Archakas 'Arivom Archakarai' drew spontaneous appreciation from the Archaka community from various temples across Tamil Nadu. They lauded the gesture of the management in bringing to the fore the devoted service rendered by the temple priests.


Our sincere thanks to all the Sponsors of the Magazine over the last year and we seek their continued support. Benedictory messages received from Acharyas of hallowed Desika Sampradaya institutions on the successful completion of a year of 'Desika Sandesam' have been published elsewhere in this issue.

## Rain-invoking measures

Our Devasthanam has been taking various measures over the last six months, like digging up a new well, organising Varuna Japam, Homam, joint prayers, Upanyasams, Musical Yajna and so on.

**Well Done!**

Bringing out a monthly magazine, especially the print edition, involves lot of challenges – mainly on the economic and logistic fronts. While the former is taken care of by the temple management with the solid support of philanthropic devotees, the Editorial Team is doing a wonderful job of the more arduous task of magazine production – be it suitable content



Editorial Board members

generation, pictorial arrangement or providing aesthetic appeal. The Editorial Board members deserve a big 'Well Done!' for the same.

Well, while it is smooth going for the magazine, the same cannot be said of an important aspect of our temple facilities. All is not well with the temple wells due to the failure of the monsoon and the Rain God is not showing any mercy on the city at all. Our Devasthanam has been taking various measures over the last six months, like digging up a new well, organising Varuna Japam, Homam, joint prayers, Upanyasams, Musical Yajna, and so on.

**Herculean task**

Unfortunately, despite all this, the water situation has not improved. Even in a situation as grim as this, the Kaikaryaparas of our temple have undertaken the Herculean task of fetching water from far-off wells in a bullock cart, in order to maintain the sanctity of our temple tradition. We wish to place on record our sincere Pranams for their invaluable service.

We hope it is only a passing phase and all our diligent efforts and solemn prayers will be answered positively, and are confident that Lord Srinivasa and His Consort will make the Rain God smile on us sooner than later.

**New-look GK Mantapam**

We have good news too. The Gangai Kondan Mantapam is all spruced up and ready for the Brahmotsavam beginning on June 4. Also four rooms for performing Annual Rituals are open to the devotees. We wholeheartedly thank the donors for their valuable contribution towards the above project.

Signing off with the hope of coming back with an 'All-Positive' Note.



ஸ்ரீ:

## விகாரி வருட வைகாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| மே/ ஜூன் | வைகாசி | | | | | |
| 15.05.19 | 1 | ஏகாதசி | புதன் | உத்தரம் (1.25 )/ ஹஸ்தம் (56.40) | மாதப்பிறப்பு – பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். தாயார் உள் புறப்பாடு, பெருமாள் வீதி புறப்பாடு | மாதப்பிறப்பு – பெருமாள் புறப்பாடு – உபயம் ஸ்ரீ.N.ரங்காச்சாரி, தாயார் புறப்பாடு – ஸ்ரீ S.V.S. ராகவன் |
| 16.05.19 | 2 | த்வாதசி | வியாழன் | சித்திரை | | |
| 17.05.19 | 3 | த்ரயோதசி (00.06)/ சதுர்தசி | வெள்ளி | ஸ்வாதி | ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜெயந்தி – ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருமஞ்சனம், ஆஸ்தானம், ஸேவாகாலம் | கொடவாசல் ஸ்ரீ R. க்ருஷ்ணன் – ஜெயக்குமார் |
| 18.05.19 | 4 | பௌர்ணமி | சனி | விசாகம் | ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் – பெருமாள், நம்மாழ்வார் திருமஞ்சனம், வீதி புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | V.D.R. பண்ட் ஸ்ரீமதி அம்புஜம் அனந்தராமன் |
| 19.05.19 | 5 | ப்ரதமை | ஞாயிறு | அநுஷம் | ஸ்ரீமந் நாதமுனிகள் | |
| 20.05.19 | 6 | த்வ்தீயை | திங்கள் | கேட்டை | ஸ்ரீ தொண்டரடிபொடிகள் | |
| 21.05.19 | 7 | த்ருதீயை | செவ்வாய் | மூலம் | திருமால்வடை | |
| 22.05.19 | 8 | சதுர்த்தி | புதன் | பூராடம் (60.00) | திருமால்வடை | |
| 23.05.19 | 9 | பஞ்சமி | வியாழன் | பூராடம் (06.05)/ உத்ராடம் | ஸேனைநாதன், (பெருமாள் வார்ஷிக உத்ஸவம் – பந்தக்கால் முஹூர்த்தம் – மிதுன லக்னம், 7.30 – 9.00 AM) | |
| 24.05.19 | 10 | ஷஷ்டி | வெள்ளி | உத்தராடம் (7.10) / திருவோணம் | தாயார் திருமஞ்சனம், உள் புறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் |
| 25.05.19 | 11 | ஷஷ்டி/ ஸப்தமி | சனி | திருவோணம் (13.05) 11.14 AM | பெருமாள், தேசிகன் திருமஞ்சனம், வீதி புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | ஸ்ரீ T.E. ஸ்ரீனிவாஸன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 26.05.19 | 12 | ஸப்தமி (9.22AM ) / அஷ்டமி | ஞாயிறு | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 27.05.19 | 13 | அஷ்டமி | திங்கள் | சதயம் | பேயாழ்வார் திருமஞ்சனம், வீதி புறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 28.05.19 | 14 | நவமி | செவ்வாய் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 29.05.19 | 15 | தசமி | புதன் | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 30.05.19 | 16 | ஏகாதசி | வியாழன் | ரேவதி | பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம், வீதி புறப்பாடு | ஸ்ரீ K. வரதராஜன் |
| 31.05.19 | 17 | த்வாதசி | வெள்ளி | அச்வினி | கடைவெள்ளி – தாயார் உத்ஸவர் திருமஞ்சனம், உள் புறப்பாடு | ஸ்ரீ K. சேதுராமன் குடும்பத்தினர் |
| 01.06.19 | 18 | த்ரயோதசி | சனி | பரணி | செல்வர் உத்ஸவம் | D.N.S. குடும்பத்தினர் |
| 02.06.19 | 19 | சதுர்த்தசி | ஞாயிறு | கிருத்திகை | அங்குரார்ப்பணம், ஸேனைநாதன் புறப்பாடு | ஸ்ரீ N. சேஷாத்ரி |
| 03.06.19 | 20 | அமாவாசை | திங்கள் | ரோஹிணீ | அதிவாஸம், மாலை த்வஜபடம் புறப்பாடு, த்வஜபட கருட ப்ரதிஷ்டை. | ஸ்ரீ A.L. ரங்கமணி |
| 04.06.19 to 13.06 19 | 21 முதல் 30 வரை | ப்ரதமை | செவ்வாய் | ம்ருகசீர்ஷம் | வார்ஷிக ப்ரஹ்மோத்ஸவம் | |
| 14.06.19 | 31 | த்வாதசி | வெள்ளி | ஸ்வாதி | விடையாற்றி – 1 ஆம் நாள் – மாலை திருமஞ்சனம் | ஸ்ரீ P.V. ராகவன் பண்ட் – ஸ்ரீ மதுதேசிகன், 2. ஸ்ரீ A.G. ஸ்ரீநிவாஸன் |
| 15.06.19 | 32 | த்ரயோதசி | சனி | விசாகம் | விடாயாற்றி – 2 ஆம் நாள் – காலை திருமஞ்சனம், மாதப்பிறப்பு – திருமஞ் சனம். வீதிபுறப்பாடு. | ஸ்ரீ கௌசிகன் |

**தேசிக மொழி**

திருவரங்கப் பெருமானே! பெரியபிராட்டியைப் பிரியாது திகழ்பவனே! நான் உனக்கும் பெரியபிராட்டிக்குமே அடியன். இவ்வடிமையை அடியேன் நன்கு ஏற்றுக்கொண்டேன். உங்களின் ஆளுகைக்கு உட்பட்ட பொருள்களுக்கும் உங்கள் திருக்கல்யாண குணங்களுக்கும் அழிவில்லை. அவை எண்ணற்று, எல்லையற்று விளங்குகின்றன. இப்படி ஒப்பற்று விளங்கும் இருவருக்கே ஸ்ரீவைகுண்டத்தில் இடையறாது, ச்ரமமின்றி நித்யகைங்கர்யம் செய்யும் பாக்யத்தை அடியேன் பெறவேண்டும்.

**- ந்யாஸ திலகம்**

ஸ்ரீ:

# சடகோப வைபவம்

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

மாதா பிதா யுவதய: தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்|

ஆத்யஸ்ய ந: குலபதே: வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா||

ஸ்வாமி நம்மாழ்வார் விஷயமாக, ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த குரு வந்தனமான இந்தத் தனியன், ஸ்ரீவைஷ்ணவர்கள் நாவில் எப்போதும் குடிகொண்டிருக்கும் மங்கள ச்லோகம் ஆகும். ஆழ்வாருக்கு 'சடகோபன், சடாரி, சடரிபு, காரிமாறன், குருகூர்-நம்பி' போன்று பல பெயர்கள் வழங்கப்பட்டபோதிலும், வைட்டிணவர்கள் அன்புடனும் உரிமையுடனும் நாவினால் நவிற்று இன்பம் எய்துவது, 'நம்மாழ்வார்' என்ற தீந்தமிழ்த் திருநாமத்தாலேயே.

இத்திருநாமத்துக்கு ஸ்வாரஸ்யம் உண்டு. இதற்கு மூலமே இத்தனியன் தான். ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸித்தாந்தத்தின் ப்ரதாந-ப்ரதிதந்த்ரமே (தலையாய தனிப்பெரும் கோட்பாடே) குருவுக்கும் (எம்பெருமானுக்கும்)-நமக்கும் இயற்கையாகவே நிலைத்து நிற்கும் ஆண்டான்-அடிமை என்ற உறவுதான். அதை சுட்டிக்காட்டுகிறது இச்ச்லோகத்தின் முன் பகுதி 'மாதா பிதா யுவதய: தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந' என்று. உத்தரார்த்தத்தில் 'ந: குலபதே:' என்றதின் தமிழாக்கம்தான் 'நம்' என்பது. மற்ற ஆழ்வார்களையெல்லாம் அவயவமாகக்கொண்டு, தான் அவயவீயாக நிற்கும் இவ்வாழ்வாரை, பெயர் சொல்லி அழைக்காமல் 'நம் + ஆழ்வார்' = நம்மாழ்வார் எனவே வழங்குகிறோம். ஆக, இப்பெயர் சூட்டியதற்கு ஆதாரமே இந்த தனியன்தான் போலும்!

இப்போது இக்கட்டுரையின் தலைப்புக்கு வருவோம் – 'சடகோபனின் வைபவம்'. சடகோபன் என்பது ஆழ்வாருடைய இயற்பெயரல்ல, காரணப்பெயராம். அது என்ன எனில் : ஒவ்வொருவரும் பிறப்பதற்கு முன், தாயில் வயிற்றில் கருவாக இருக்கும்போது, 'பூர்வ ஜன்ம வாஸனையும், அறிவில் சுருக்கம் இல்லாதவர்களாயும்' இருப்போமாம்; கர்ப்பத்திலிருந்து வெளிவரும் தருணத்தில், இவ்வுலகில் நிலவும் 'சடம்' என்ற காற்று பட்டவுடன், இவையெல்லாம் மறந்து போகுமாம். இது பொதுவிதி. ஆனால், ஆழ்வார்தான் அவதார-புருஷராயிற்றே. அதனால் இந்த பொதுவிதிக்கு விலக்காய் நிற்பவர். உலகில் அவதரிக்கும்போது, சடம் என்ற அக்காற்று



தன்னைக் கவராமல், அதை விரட்டியவர் – கோபித்தவர் – என்பதனால் 'சட + கோபன்' எனப் பெயர் பெற்றார். இதனை அவரே 'மயர்வற மதி நலம் அருளினன்' என மொழிகிறார். இதே பொருளைக் கொண்ட வடமொழிச் சொற்கள்தான், 'சடாரி, சடரிபு' என்பவைகள்.

இனி, தலைப்பின் இரண்டாம் சொல்லான 'வைபவ'த்துக்கு விளக்கம் காண்போம். இந்த வடமொழிச்சொல் பல பொருள்களில் பயன்படும். அவற்றில், 'பெருமை, சொத்து' என்பனவும் உண்டு. இவையிரண்டையும் ஆழ்வார் விஷயமாகப் பொருத்திப் பார்ப்போம்.

முதலில் 'பெருமை' – 1) எம்பெருமான், ஒருவருக்கு மயர்வற மதிநலம் அருளுவது, அவன் எவரை வரிக்கிறானோ (நேசிக்கிறானோ) அவனுக்குத்தான் உண்டாகும். 'எமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:' என்பதல்லவோ வேதவாக்யம்! அப்படியானால் இது எம்பெருமானுடைய ஸ்வாதந்த்ர்யத்தால் ஏற்படுகிறதா என்றால், இல்லை. எம்பெருமான் யாரை நேசிப்பான்? 'ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்' என்று அவனே பதிலும் சொல்லியிருக்கிறான். எம்பெருமானை உள்ளபடி அறிந்து வரணீயோ பவதி' என்ற நியதியை ஒட்டி, ஜ்ஞாநீயான ஆழ்வாரை ஆசைப்பட்டு எம்பெருமான் அவர்க்கு மதிநலம் அருளினான் என்பது கிடைக்கிறது. இது ஆழ்வாரின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

## ஆழ்வாரின் திருநாமங்கள்

**எப்படி நம் ஸம்ப்ரதாயத்தில் 'கோயில்' என்பது திருவரங்கத்தையும், 'ஶ்ரீஜயந்தீ' என்பது க்ருஷ்ண ஜயந்தியையும் குறிக்குமோ, அதேபோன்று 'ஆழ்வார்' என்றாலே அது நம்மாழ்வார் தான். அவரது திருநாமங்களில் முக்கியமானவை இதோ:**

**சடகோபன்**

**நம்மாழ்வார்**

**மாறன்**

**காரிமாறன்**

**பராங்குசன்**

**வகுளாபரணன்**

**குருகூர் நம்பி**

**குருகைப்பிரான்**

**குருகையர் கோன்**

**பொருநல் துறைவன்**

2) எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களை அளவிட்டுச் சொல்லமுடியாமல் வேதங்கள் பின்வாங்கின. வேதம் தமிழ்செய்த மாறனோ, ப்ரபந்தத்தை எடுத்த எடுப்பிலே, 'உயர்வற உயர் நலம் உடையவன்' என அடக்கிவிட்டார். மேலும், வேதத்தை அநுஸந்திக்கத் தகுதியில்லாத வர்களும் இழவாதபடி, க்ருபையினால் த்ராவிட பாஷையில் அருளிச்செய்தார்.

3) ஆழ்வார், எம்பெருமான் கடாக்ஷபூதர்; அவனால் விஷயீகரிக்கப்பட்டவர். தத்வ-ஹித உபதேச நிபுணர்; விதுர-சபர்யாதிகளில் விலக்ஷணர்.

4) பரமத நிரஸநபூர்வகமாக, எம்பெருமானின் பாரமார்த்யத்தை ஸ்தாபித்தவர்.

பன்னி உரைக்குங்கால் பாரதமாம். 'எதாவாந் அஸ்ய மஹிமா' (பு. ஸூ.)

அடுத்து அவருடைய சொத்து. 'ஸாஹி ஶ்ரீ அம்ருதா ஸதாம்' என்றது வேதம். ஆழ்வார் போன்ற ஸத்து க்களுக்கு வேதம்தான் மிகச் சிறந்த சொத்து. நான்கு வேதங்களின் உட்பொருளை தன் நான்கு ப்ரபந்தங்களில் அடக்கி, 'மாயனை நம் மனதில் நிற்கச்செய்தவர்'. இந்த நான்கு ப்ரபந்தங்களும், சுருக்கமாக அவற்றின் கருத்தும்:-

1) திருவிருத்தம்: ஸ்வரூப ஜ்ஞானம்பெற்ற ஆழ்வார், இதில் தேஹ ஸம்பந்தத்தை ஸஹிக்கமாட்டாமல் 'பொய்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை' என அதனை அறுக்கும்படி எம்பெருமானை வேண்டுகிறார்.

2) திருவாசிரியம்: ஆழ்வாரின் விண்ணப்பத்துக்குச் செவிசாய்த்த எம்பெருமான், அவருக்குத் தன் பூர்ண ப்ரத்யக்ஷாநுபவம் அருள, இதனை 'செக்கர் மாமுகில் உடுத்து' எனத்தொடங்கும் இப்ப்ரபந்தத்தால், தானும் அநுபவித்து, நமக்கும் தான் அநுபவித்தபடியே பேசுகிறார்.

3) பெரிய திருவந்தாதி: தான் பெற்ற அநுபவம் கரைபுரண்டு வழிந்த நிலையில், 'முயற்றி சுமந்தெழுந்து... நெஞ்சே இயற்றுவாய்... நற்பூவைப் பூவீன்ற வண்ணன் புகழ்' எனத்தொடங்கி, இப்ப்ரபந்தத்தை 'சொல் நினைந்து போக்காரேல் எந்நினைந்து போக்குவர் இப்போது' என முடிக்கிறார்.

4) திருவாய்மொழி: இவ்வாறு, மற்ற புருஷார்த் தங்களை வெறுத்து, ஆராக் காதலால் எம்பெரு மானையே எல்லாமாகப் பற்றியவர், 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டியபடி' ஆர்த்த ஸ்வரத்தாலே எம்பெருமானை அழைத்து, அதனைப் பெற்று, தன் மநோரதத்தை ஒருபடியே முடித்ததை, இதில் சொல்கிறார்.

இப்படி, வேதத்தில் கர்ம-ப்ரஹ்ம காண்டங்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய 'ஏக-சாஸ்த்ரம்' என்ற கருத்துப்படி, ஆழ்வாரின் நான்கு தமிழ்ப் ப்ரபந்தங்களும் ஏக-சாஸ்த்ரம் என அந்வயம் சொல்லப்பட்டது. இவற்றின் வகை-தொகையும், ஸங்கதியும் சுருங்கச் சொல்லும் ஸ்வாமி தேசிகனின் ஸந்தேசமான ப்ரபந்தஸாரப் பாசுரம் இதோ:

முன்னுரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்
முறையின்வரும் ஆசிரியம் ஏழுபாட்டும்
மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி
மறாவாதபடி எண்பத்தேழு பாட்டும்
பின் உரைத்தோர் திருவாய்மொழி எப்போதும்
பிழையற ஆயிரத்தொரு நூற்றிரண்டுபாட்டும்
இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில்
எழிற் குருகைவரு மாறா! இரங்கு நீயே.''

ஸ்வாமி நம்மாழ்வார், இம்மாத விசாகத் தாரையில் அவதரித்து, அவைகளை புனிதப்படுத்திய இத் தருணத்தில், அவர்தம் வைபவத்தைக் கூறி அநுபவித்து நாமும் க்ருதார்த்தராவோம்.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்!



வருஷப் பிறப்பு, ஸ்ரீ ராம நவமி உத்ஸவம்









## அவதார உத்ஸவம்











சித்திரை ச்ரவணம்







சித்திரை சதயம்









# சித்ரா பௌர்ணமி
















சித்ரா பௌர்ணமி




ஸ்ரீ:

# வஸந்த உத்ஸவம் - ஆஸ்தானம்





ஶ்ரீ:
கண்ணுக்கினியன





அக்ஷய த்ருதீயை புறப்பாடு







ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் புறப்பாடு









ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் புறப்பாடு













ஸ்ரீ:

# ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள்

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய் கிடந்து உன்பவளவாய் காண்பேனே. — பெருமாள் திருமொழி – 4–9

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது விகாரி வருஷம் வைகாசி மாதம் 21ம் தேதி (04.06.2019) செவ்வாய்கிழமை முதல் ப்ரஹ்மோத்ஸவம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருப்பதால், அம்மஹோத்ஸவத்தில் ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் கைங்கர்யபரர்களாயிருந்து திருமயிலை ஸ்ரீதிருவேங்கடமுடையானுடைய க்ருபைக்கு பாத்திரர்களாக ப்ரார்த்திக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| *31.05.2019* | வெள்ளிக்கிழமை | மாலை | *கடை வெள்ளி* |
| *04.06.2019* | செவ்வாய்கிழமை | காலை | *த்வஜாரோஹணம்* |
| *06.06.2019* | வியாழக்கிழமை | காலை | *தங்க கருட வாஹனம்* |
| *10.06.2019* | திங்கட்கிழமை | காலை | *திருத்தேர்* |
| *12.06.2019* | புதன்கிழமை | காலை | *தீர்த்தவாரி* |

R.முகுந்தன், P.சேஷாத்ரி, N. கஸ்தூரிரங்கன்
தர்மகர்த்தாக்கள்

| நாள் | நேரம் | உற்சவ விவரம் மற்றும் உபயதாரர் |
|---|---|---|
| 01.06.19 (சனி) | இரவு 7 மணி | **செல்வர் உத்ஸவம்**<br>உபயம்: D.N.S Family |
| 02.06.19 (ஞாயிறு) | இரவு 7 மணி | **அங்குரார்ப்பணம் - ம்ருத்ஸங்க்ரஹணம் (சேனைநாதன் புறப்பாடு)**<br>உபயம்: ஸ்ரீ. N. சேஷாத்ரி |
| 03.06.19 (திங்கள்) | இரவு 7 மணி | **அதிவாஸம் - த்வஜபடம் வீதி புறப்பாடு**<br>**த்வஜபட கருட ப்ரதிஷ்டை** உபயம்: ஸ்ரீ. A.L. ரங்கமணி |
| 04.06.19 (செவ்வாய்) | காலை<br><br>காலை 6.30 மணி<br>இரவு 7.30 மணி | **த்வஜாரோஹணம்** உபயம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தான அர்ச்சகர்கள்<br>*(காலை 3.30 - 4.15 மணி மேஷ லக்னம்)*<br>**பவழக்கால் சப்பரம்** உபயம்: ஸ்ரீ. ரகுபதி & ராம்<br>**ஸிம்ஹ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. K. வேணுகோபாலன் |
| 05.06.19 (புதன்) | காலை 6.30 மணி<br><br>இரவு 7.30 மணி | **ஹம்ஸ வாஹனம்** உபயம்: எலக்டோரல் போர்டு<br>திருமஞ்ஜனம் உபயம்: ஸ்ரீ. N.S. வரதாச்சாரியார்<br>**ஸூர்யப்ரபை** உபயம்: 1. ஸ்ரீ. N. கஸ்தூரிரங்கன், 2. ஸ்ரீ. R. சுந்தரராகவன் 3. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன் |
| 06.06.19 (வியாழன்) | காலை 6.00 மணி<br><br>இரவு 7.30 மணி | **தங்க கருட வாஹனம்**<br>உபயம்: ஸ்ரீ. S. வரததேசிகன் குடும்பத்தினர்<br>**ஹனுமந்த வாஹனம்**<br>உபயம்: 1. ஸ்ரீ. R.வாசுதேவன் 2.ஸ்ரீ. C.கோதண்டம் 3. ஸ்ரீமதி சீதா ரங்கநாதன் 4. பிள்ளைபாக்கம் நரஸிம்மராகவாச்சாரி ட்ரஸ்ட் |

ஸ்ரீ:

# ப்ரஹ்மோத்ஸவ பத்ரிகை

| நாள் | நேரம் | உற்சவ விவரம் மற்றும் உபயதாரர் |
|---|---|---|
| 07.06.19 (வெள்ளி) | காலை 6.30 மணி<br>இரவு 7.30 மணி | **சேஷ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. M.D. சுதர்சனம் ஐயங்கார் ட்ரஸ்ட்<br>**சந்திர ப்ரபை** உபயம்: M/s. சுந்தரம் சாரிடீஸ் |
| 08.06.19 (சனி) | காலை 5.00 மணி<br>இரவு 7.30 மணி | **நாச்சியார் திருக்கோலம்** உபயம்: ஸ்ரீ. R. முகுந்தன்<br>**யாளி வாஹனம்** உபயம்: ஸ்ரீ. M. கணேசன் |
| 09.06.19 (ஞாயிறு) | காலை 6.30 மணி<br><br>இரவு 7.30 மணி | **வேணுகோபாலன் திருக்கோலம் (சூர்ணாபிஷேகம்)**<br>உபயம்: ஸ்ரீ. V.C. முரளிதரன்<br>**யானை வாஹனம் - (ஏசல்)** உபயம்: ஸ்ரீ. ராகவாச்சாரியார் குடும்பத்தினர் |
| 10.06.19 (திங்கள்) | காலை<br><br><br>இரவு 7.30 மணி | **திருத்தேர்** *காலை 3.30 - 4.00 மணி மேஷ லக்னம்*<br>காலை 7.00 மணிக்கு புறப்பாடு<br>உபயம்: ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு)<br>**தங்கக்கேடயம் (தோட்ட உத்ஸவம்)** உபயம்: ஸ்ரீ. K.ரங்கநாதன் |
| 11.06.19 (செவ்வாய்) | மதியம் 1 மணி<br><br><br>இரவு 7.30 மணி | **திருப்பாய்ந்தாடு திருமஞ்ஜனம்**<br>உபயம்: 1. ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா<br>2. திருக்கண்ணமங்கை ஸ்ரீ. S. சுந்தரராஜன் ஐயங்கார் பண்டு<br>**குதிரை வாஹனம்** உபயம்: 1. ஒலக்கூர் ஸ்ரீ. ராஜகோபாலன் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி நிர்மலா J. ஸ்ரீநிவாஸன் 3. ஸ்ரீ. K. ராமன் |
| 12.06.19 (புதன்) | காலை 6.30 மணி<br>மதியம் 12 மணி<br>இரவு 7.30 மணி | **ஆள்மேல் பல்லக்கு (மட்டையடி மஹோத்ஸவம்)**<br>**தீர்த்தவாரி** உபயம்: 1. ஸ்ரீ. S.R. ஜெகந்நாதன் 2. ஸ்ரீ. T.P. பத்மநாபன்<br>**ஆனந்த நிலைய விமானம்**<br>உபயம்: ஸ்ரீ. T. நாராயணன் & ஸ்ரீ. S. நாராயணன் |
| 13.06.19 (வியாழன்) | காலை 9 மணி<br>மதியம் 1 மணி<br>இரவு 7.30 மணி<br>இரவு 10 மணி | **திருமஞ்ஜனம்** உபயம்: TCN Trust<br>**த்வாதச ஆராதனம்** உபயம்: ஸ்ரீ. R. கோபாலசாமி ஐயங்கார்<br>**வெட்டிவேர் சப்பரம்** உபயம்: வனபோஜனம் ட்ரஸ்ட்<br>**த்வஜ அவரோஹணம்** |
| (பிரதி தினம் காலை 9:30 மணிக்கு திருமஞ்ஜனம், காலை 11 மணிக்கு ததியாராதனை, மாலை 6:00 மணிக்கு பத்தி உலாத்தல், மாலை 7 மணிக்கு ததியாராதனை நடைபெறும்) | | |

| விடையாற்றி உத்ஸவம் | | |
|---|---|---|
| 14.06.19 (வெள்ளி) | மாலை 4 மணி | **திருமஞ்ஜனம்**<br>உபயம்: 1.ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் பண்டு (ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர்)<br>2.ஸ்ரீ. A.G. ஸ்ரீனிவாசன் |
| 15.06.19 (சனி) | காலை 9.30 மணி | **திருமஞ்ஜனம்**<br>உபயம்: ஸ்ரீ. கௌசிகன் |
| 16.06.19 (ஞாயிறு) | காலை 9.30 மணி<br>இரவு 7 மணி | **திருமஞ்ஜனம்**<br>**புஷ்ப பல்லக்கு** உபயம்: ஸ்ரீ. S. சுந்தரம் |

**Note:** 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH OR CHEQUE (in favour of Sri Vedantha Desikar Devasthanam)

2. In order to ensure frequent and speedier communication, please furnish your email ID. Please ignore if you have already sent.

3. Please also note that all your future correspondence will also be sent through email or SMS.








## மழை தரும் மஹாத்மாக்கள் - உபந்யாஸம்



ஸ்ரீ:

# பறவை ஏறு பரம்புருடன்

ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்


''வையத்தெவரும் வணங்க அணங்கெழுமா மலை போலே தெய்வப்புள்ளேறி வருவான்'' என்பது நம் வாள்வேல் கலியனின் வாக்கு.

ஆழ்வாராதிகளால் அருளிச்செய்யப்பட்ட திவ்யதேச ங்கள்மற்றும்ஆசார்யர்களின்அபிமானஸ்தலங்களில் எம்பெருமான்களின் ப்ரம்மோத்ஸவங்கள் பல இருந்தாலும், முக்கியமானது என்பது கருடோத்ஸவமும், திருத்தேரும் தான். அதிலும் மிக முக்யமானது கருடோத்ஸவம் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே நம் பெரியோர், திருவரங்கம், பெருமாள் கோவில், திருநாங்கூர், திருவஹீந்திரபுரம், திருக்குடந்தை, திருஎவ்வுள், போன்ற திவ்யதேச உத்ஸவங்களில் நடக்கும் கருடோத்ஸவங்கள் விசேஷம் என்று உரைப்பர். திவ்யதேச வாஸிகளில் சிலர் உத்யோக நிமித்தமாக வெளியூரில் இருந்தாலும், கருடோத்ஸவ தின த்தன்று எப்படியாவது தங்களுக்கு பெருமாள் ஸேவை கிடைக்கப்பெற மாட்டோமா என்று ஏங்குபவார்கள் இன்றும் உளர். இது **''ஒரு நாள் காண வாராய்''** என்று ஆழ்வார், காட்டிய வழியே.

ஒரு வருடத்தில் ப்ரம்மோத்ஸவ காலங்களில் மட்டும் கருடாரூடனாய் ஸேவை சாதிக்காமல், ஆனி கருடன், ஆடி கருடன், மற்றும் ஸம்ப்ரோக்ஷண காலங்களிலும், சில விசேஷ தினங்களிலும் பரம க்ருபையோடே ஆச்ரிதர்களின் மனோரதம் நிறைவேற வேகப் பறவையான கருடன் மீது **''வீதியார வருவான்''** என்றபடி பவனி வந்து அநுக்ரஹம் பண்ணுகிறான் எம்பெருமான். இவையாவும் அர்ச்சா மூர்த்தியாய் அவன் இருக்கும் போது.

யுகாந்திரங்களில், ஆச்ரிதர்களின் ஆர்த்தி த்வனியைக் கேட்ட மாத்திரத்தில் தான் ஆச்ரித ஸுலபன், அடியவர்க்கு மெய்யன், பக்த வத்ஸலன் என்பதைக் காட்ட, பரமபதத்தில் இருந்து கருடாரூடனாய் உடனே கிளம்பி வந்து எம்பெருமான் பல ஸமயங்களில் அநுக்ரஹித்து ரக்ஷிப்பதும் உண்டு. இது எம்பெருமானின் லீலாரஸங்களில் ஒன்று.

குட்டத்து முதலையின் வாயில் தன் காலைக் கொடுத்து ஆயிரம் தேவ வருஷங்கள் தன் பலமொன்றையே நம்பி சண்டை இட்டு முடியாமல், 'ஆதிமூலமே அபயம்' என்று கையெடுத்து



அலறிய வேழத்தின் துயர் துடைக்க, முப்பத்து மூவர்க்கு முன் கப்பம் தவிர்க்க பரமபதத்தில் இருந்து கருட வாஹனனாய்ச் சென்று நின்று தன் திருவாழி தொட்டு அநுக்ரஹம் செய்தான். **''ஆனைக்கு அன்று அருளை ஈந்த கண்ணறா'' என்றும், ''கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்''** என்றும் ஆழ்வாராதிகளால் மங்களா சாஸனம் செய்யப் பெற்றான். கதறும் வேழத்திற்கு விரைந்து அநுக்ரஹிக்க வேண்டி, கருடனின் வேகத்தில் நம்பிக்கை இழந்த பெருமாள், பெரிய திருவடியையும் சேர்த்து இழுத்துக் கொண்டு அதி விரைவாக வந்து அநுக்ரஹித்தார் என்பர் பெரியோர். ஸ்ரீ கஜேந்த்ர மோக்ஷத்திற்கு, நாகணைமிசை நம்பிரான் பரமபதத்தில் இருந்து **''அரை குலைய தலை குலைய வந்து நின்றார்''** என்று பெரியவாச்ச ான் பிள்ளை தன் 'திருமாலை' வ்யாக்யானத்தில் ஸாதித்தார். ஆச்ரிதர்களின் துயர் துடைக்க

அவன் ''தெய்வப்புள்ளேறி'' வந்து அநுக்ரஹம் பண்ணுகிறான்.

கல்பஸூத்ரவ்யாக்யாதாவான ஸ்ரீ பெரியாழ்வாருக்கு திருவீதியில் கருடவாஹனனாய்த் தோன்றி அவரிடம் வாழ்த்துப் பெற்று, நமக்கு ஏரணி பல்லாண்டு 473 பாசுரங்கள் அனுக்ரஹிக்கக் காரணமானான். **''பறவை ஏறு பரம் புருடா நீ என்னைக் கைக்கொண்டபின், பிறவி என்னும் கடலும் வற்றிப் பெரும்பதம் ஆகின்றதால்''** என்றபடி, அவனது கருடவாஹன ஸேவையை ஸேவித்து மகிழ்வோர்க்கு பிறவித்துயர் (ப்ராக்ருத நிர்பந்தம்) நீங்கி கலங்காப் பெருநகர் ப்ராப்தமாகும் என்கிறார் பெரியாழ்வார்.

பரம்புருடனைப் பற்றி மாத்திரம் நாம் அறியாமல், அவனுக்கு ஸர்வதா கைங்கர்யம் செய்யும் நித்யஸூரியான பெரிய திருவடியையும் அறிவது இன்றியமையாததாகிறது. இவர் யார்? வினதை சிறுவன் என்று அழைக்கப்படுவர். இவர் பெருமாளின் வாஹனம். எம்பெருமானுக்குப் **'புள்ளாளன்'** என்ற திருநாமமும் உண்டு. இவர் பெருமாளின் கைங்கர்யத்திற்காகக் காத்துக்கொண்டு இருப்பவர். தேவாஸுர யுத்தத்தில் இவர் பெருமாளுக்கு அவன் திருவுள்ளம் உகக்கும் வண்ணம் உபகாரம் செய்தார். பகவானின் நியமனத்தின் பொருட்டு பாற்கடல் கடையும் போது இவரே மந்தர மலையைச் சுமந்து வந்து கடலின் மத்தியில் அழுத்தியவர்.

பெருமாள், இவரது தோள்கள் மீது அமரவில்லையாயின் அவற்றுக்கு ஊறல் எடுக்கும். எம்பெருனான் தன் மீது எப்போது எழுந்தருளுவார் என்று ஏங்குபவர். பெருமாள் விஷ்வக்ஸேனரின் பிரம்பின் கீழும், கருடனின் அகன்ற சிறகின் கீழும் தான் இவ்வுலகை ஆட்சி செய்கிறார் என்று பெரியோர் பணிப்பர். குடப்பாம்பில் கையிட்ட குலசேகரனும், தன் பெருமாள் திருமொழியில் **''கடும் பறவை இவை அனைத்தும் புறம் சூழ் காப்ப''** என்றருளிச் செய்து, பெரிய திருவடியே திருவரங்கத்தை காக்கின்றார் என்கிறார்.

ஸ்வாமி நம்மாழ்வாரும் **''அருளாத நீர் அருளி அவர் ஆவி துவராமுன், அருளாழிப்புள் கடவீர் அவர் வீதி ஒரு நாள் என்று அருளாழி அம்மானை கண்டக்கால் இது சொல்லி அருளாழி வரிவண்டே யாமும் என் பிழைத்தோமே''** என்று அருளிச்செய்து மிகவும் அநுக்ரஹம் செய்பவர் பரம க்ருபாளுவான பெரிய திருவடி, தன் மேல் எம்பெருமான் ஒரு நாள் ஊர்ந்து வந்து ஸேவை ஸாதிக்க வேண்டி அதற்காகவே தான் உயிர் பிழைத்திருப்பதாக வண்டைத் தூது விடுகிறார். அவர் என் இல்லத்திற்குக் கூட வரவேண்டாம், அவர் கருடவாஹனனாய் வலம்



வரும் வீதியில் ஒரு நாள் ஸேவித்தால் போதுமானது என்கிறார். இதுவே கருடோத்ஸவத்தின் ஏற்றம்.

மேலும், **''புள்ளின் பின் போன தனி நெஞ்சம்'', ''வேகப் பறவையின் பாகன்''** என்றும் மங்களாசாஸனம் பண்ணுகிறார்.

பரகாலனும், **''மஞ்சுயர் பொன்மலை மேலேழுந்த மாமுகில் போன்றுளர் வந்து காணீர், அஞ்சிறைப்புள்ளும் ஒன்று ஏறி வந்தார் அச்சோ ஒருவர் அழகியவா?''.** இங்கு, கருடனாகிய பொன்மலையின் மேல் முகில் நிறத்தில் உள்ள எம்பெருமான் ஏறிவந்தார்; அவர் மிகவும் அழகியவர் என்று திருநாகை அழகியாரை மங்களாசாஸனம் செய்கிறார்.

கருடனின் உருவே மறை (நான்கு வேதங்கள்), அதன் பொருள் தான் கண்ணன், என்று ஸ்வாமி தேசிகன்தன்னுடைய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் **''புருடன் மணிவரமாக... கருடன் உருவாம் மறையின் பொருளாம் கண்ணன்''** என்று ஸாதிக்கின்றார்.

எம்பெருமான் நமக்குச் செய்யும் உபகாரங்களுக்கு, பெரிய திருவடியும் ஸஹாயம் பண்ணுகிறார். தன் தோளில் பெருமாளை சுமந்து வந்து அவனை ஆச்ரிதர்களுக்கு அநுக்ரஹம் செய்ய வைக்கிறார். கருடனுக்கு மட்டும்தான் ''தெய்வப்புள்'' என்று ஸம்ப்ரதாயத்தில் திருநாமம். பேச நின்ற சிவனுக்கும், பிரமனுக்கும் பிறர்க்கும் நாயகனான தெய்வம் திருநாரணனன். அவன் அமரும் வாகனம் கருடனானதால், அவர் **''தெய்வப்புள்''** என்று வழங்கப்படுகிறார்.

நம் ஸம்ப்ரதாயமே புள்ளினுடையது என்பர். **''அன்னமாகி அன்று (ப்ரம்மனுக்கு) அருமறை பயந்தவன்'' ''அன்னமதாய் இருந்து அறநூல் உறைத்த''** பெருமாள். ஸ்ரீ பெரியாழ்வார் 'கருடனின் அம்சம்' என்பர். ஸ்வாமி தேசிகனின் ஆசார்யர் அப்புள்ளார், இவர் வளர்த்த கிளி (மடக்கிளி) தூப்புல் குலமணி. அப்புள்ளார் **''தம்மை கிளியைப் பழக்குமாப் போலே பழக்கி வைத்து பேசுவித்த பாசுரங்கள்''** என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதிக்கின்றார் ஸ்ரீ தேசிகன். அவருக்கு, கருடன் ஹயக்ரீவ மந்த்ரம் உபதேசம் செய்த ஆசார்யன் ஆவார். கருடன் மீது கருடதண்டகம், கருடபஞ்சாசத் ஆகிய ஸ்தோத்ரங்கள் பாடியுள்ளார். திருவரங்கத்தில் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம் ஒர் இரவில் அநுக்ரஹித்தபோது, கருடனே ஸ்லோகங்களைப் பட்டோலைப் படுத்தியவர் என்று பெரியோர் அருளிச்செய்வதும் உண்டு.

இவர்கள் அனைவருக்கும் பரமாப்க்ரஹம் செய்பவன் அந்தப் ''பறவை ஏறு பரம்புருடனே''. இவனே எம்பொழுதும் **''காய்சினப் பறவை ஊர்ந்து



பொன்மலையின் மீமிசைக் கார்முகில் போலே''** வந்து, கலைகளும், வேதமும், நீதி நூலும், கற்பமும், சொற்பொருள் தானும், மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும், தன் நீர்மையினால் நிர்ஹேதுகமாய் அருள் செய்கின்றான்.

**''அத்தியூரான் புள்ளையூர்வான்''** என்று பூதத்தாழ்வார் மங்களாசாஸனம் செய்து, மூன்று தீயாகி, மறையாகி, மாகடல் நஞ்சுண்டவனுக்கும் இறையாவான் என்றார். எனவே, வ்ருஷப மாதத்தில் பேரருளாளனும், நம் திருமயிலை ஸ்ரீநிவாஸனும் தத்தமது ப்ரம்மோத்ஸவத்தில் தெய்வப்புள் ஏறி அநுக்ரஹிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பறவையும், பரம்புருடனும் நமக்கு என்றுமே தஞ்சமென்பதால், முத்தி தரும் காஞ்சி சென்று பேரருளாளனையும் (19.05.2019), இங்கே ஸ்ரீநிவாஸனையும் (06.06.2019) கருட வாஹனனாய் ஸேவித்து மகிழ்வோம் வாரீர்!

# பவள விழாவை நோக்கி நடைபோடும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்ய ஸபை


ஸ்ரீ உ.வே நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

ச்ரிய: பதியான எம்பெருமானுக்கு நித்ய விபூதியில் வாஹநமாக ''வேதாத்மா விஹகேச்வர:'' என்று நம் அனைவராலும் கொண்டாடப்பெறுகின்ற வைநதேயனான ஸ்ரீ கருத்மான் உள்ளான். எம்பெருமானும் கருடவாஹனனாயிருப்பதாலேயே எப்பொழுதும் ஜயமுடையவனாய் இருக்கிறான். அதனால், பெரியோர்கள் எம்பெருமானையும், ஸ்ரீ கருடனையும் ஒன்றாகவே த்யானிப்பர் என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் தம்முடைய ''கருட பஞ்சாசத்'' என்கிற ஸ்தோத்திரத்தில் அருளிச்செய்கிறார்.

இப்படி ஸ்ரீ கருத்மான் நித்யவிபூதியில் பகவானுக்குச் செய்யும் கைங்கர்யத்தை, எம்பெருமானின் அர்ச்சாவதாரத்தில் செய்து மகிழ்பவர்கள் ஸ்ரீபாதம் தாங்கிகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

அந்த வகையில், அகஸ்த்ய ஸேவித தேசமான நம் தமிழ் நாட்டின் ராஜதானியாய் விளங்கும் சென்னைப் பட்டினத்தில் அமைந்துள்ளதும், முதலாழ்வார்களில் ஒருவரான தமிழ்த்தலைவன் நம் பேயாழ்வார் அவதரித்ததுமான நீளோதம் வந்தலைக்கும் மாடமாமயிலை சரித்திரப்புகழ் வாய்ந்த ஒரு ஒப்பற்ற திவ்யதேசமாகும்.

ஸ்ரீ வைஷ்ணவ அன்பர்கள், இங்கு அமைந்துள்ள ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் அகலகில்லேன் என்றுறையும் ஸ்ரீ அலர்மேல்மங்கை நாதனான ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் மற்றும் ஸ்வாமி ஸ்ரீ தேசிகனுக்கும், நம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு சில ஆண்டுகள் முன்பு தொடங்கி ஸ்ரீபாத கைங்கர்யத்தைச் செய்து வந்தனர். அவர்கள் உள்ளத்தில், ஸ்ரீரங்கத்தில் பெரிய பெருமாள் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் நடைபெறுவது போல், இந்த தேவஸ்தானத்திலும் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கொண்டே ஸகலவிதமான புறப்பாடுகளையும் பண்ணவேண்டும் என்கிற ஓர் ஏக்கம் மட்டும் இழையோடிக்கொண்டிருந்தது. இது மேலும், ஸ்ரீரங்கநாதன் கண்டருள்வது போல, விதவிதமான நடையழகை, நம் ஸ்ரீநிவாஸன் மற்றும்





ஸ்வாமி ஸ்ரீ தேசிகனும் கண்டருளவேண்டுமென்ற பேரவாவாக உருவெடுத்தது.

**கைங்கர்யத்தின் தொடக்கம்**

இதன் காரணமாக, திருமயிலையைச் சுற்றியுள்ள ஆர்வம் மிக்க ஸ்ரீவைஷ்ணவ இளைஞர்கள் அடிக் கடி கலந்தாலோசித்து, 73 வருடங்களுக்கு முன்பு, அதாவது 1946ம் வருடம் ஏப்ரல் மாதம் 28ம் தேதி, தர்சந ஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவத்தின் போது மிகுந்த உத்ஸாகத்துடன் ஒரு அமைப்பினைத் தொடங்கி, அதற்கு ''ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாத கைங்கர்ய ஸபை'' என்று பெயரிட்டனர்.

இக் காலக்கட்டத்தில், உத்யோகத்திற்குச் சென்று கொண்டிருந்த இளைஞர்கள், வைதீகம் மற்றும் பரிசாரகத்துறை முதலியவற்றில் ஈடுபட்டிருந் தவர்கள் மற்றும் பள்ளி / கல்லூரி மாணவர்கள் ஆகியோர் இந்த ஸ்ரீபாத கைங்கர்யத்தில் வலிய வந்து ஸேவை மனப்பான்மையுடன் தங்களை ஈடுபடுத்திக் கொண்டது மட்டுமல்லாமல், மேற்படி ஸபைக்குத் தங்கள் உளமார்ந்த ஆதரவினையும் அளித்துவந்தனர்.

இப்படியாக, 12 வருடங்கள் கழிந்த நிலையில், மேற்படி ஸபை 18/02/1958 அன்று இந்திய ஸொஸைட்டி பதிவுச் சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்டு, ஸபைக்கான சட்ட திட்டங்கள் வறையறுக்கப்பட்டன. மேலும், முறைப்படி நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதுமுதல் இச் ஸபையின் நிர்வாகம் சீராக நடைபெற்று வருகின்றது. அங்கத்தினர்கள் தவிர, மயிலாப்பூரிலுள்ள இளைஞர்களும், நடுத்தர வயதினரும் இச்ஸபையின் கைங்கர்யத்தில் மிகுந்த உத்ஸாகத்து டன் இன்றளவும் பங்கு பெற்று வருகின்றனர்.

இந்த ஸ்ரீபாத கைங்கர்யத்திற்காக, ஸ்ரீவேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திலிருந்து ஒரு சிறு தொகை மேற்படி ஸபையினரால் ஊதியமாகப் பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட தொகை ஒரு குறிப்பிடத்தக்க மூலதனமாகச் சேர்ந்துவிடவே, தேவஸ்தானத்தின் அப்போதைய தர்மகர்த்தாக்கள், மயிலாப்பூரில் வேங்கடேசஅக்ரஹாரத்திற்குஅருகில்அமைந்துள்ள ஸ்ரீ அலர்மேல்மங்காபுரத்தில் கோவிலுக்குச் சொந்தமான ஒரு நிலத்தைத் தருவதாகவும், அதில் இந்த ஸபை ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டு, அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு தேவஸ்தானத்தில் பெருமாளுக்கும், ஸ்வாமி தேசி கனுக்கும் உத்ஸவாதிகளைச் செய்யும் படியும் நல்லதொரு யோசனையைக் கூறினர். இது இந்த ஸபையினருடைய தன்னலம் கருதாத அத்யாத்ம கைங்கர்யத்தை எம்பெருமானும், ஸ்வாமிதேசிகனும் போர உகந்து, அவர்களால் அருளப் பெற்றதான ஒரு அத்புதமான வரப்ரஸாதமாகும்.

இப்படி பகவத் மற்றும் பாகவத அநுக்ரஹ விசேஷங்களின் பயனாக ஒரு வீடு கட்டி முடிக்கப்பட்டு, 1958ம் வருடம் ஏப்ரல் மாதம் 22ம் தேதி, ஸ்ரீபெருமாள் மற்றும் ஸ்வாமி தேசிகன் எழுந்தருளப்பண்ணப் பட்டு, க்ருஹப்ரவேசம் மிக நல்லபடியாகப் பூர்த்தியாயிற்று. இந்தக் காலகட்டத்திலும் பலர் முக்கியமான ஸேவை புரிந்தனர்.



அது முதல் தொடங்கி ஒவ்வொரு வருஷமும் சித்திரை மாதம் அக்ஷய த்ருதியை அன்று ஸ்ரீபெருமாளும், ஸ்வாமி தேசிகனும், ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்ய ஸபையினைச் சேர்ந்த இந்த க்ருஹத்திற்கு எழுந்தருள்வது இன்றளவும் வழக்கமாக இருந்து வருகின்றது.

நம் ஸந்நிதியில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுக்கும் (வைகாசி ப்ரம்மோத்ஸவம் - ஆறாம் திருநாள்), ஸ்வாமி தேசிகனுக்கும் (புரட்டாசி வார்ஷிக உத்ஸவம் – எட்டாம் திருநாள்) மேற்படி ஸபையினரால் நடத்தப்பெறும் யானைவாஹன ஏசல், அதைத் தொடரும் மகுடி, மற்றும் ஸ்வாமி தேசிகனுடைய திருநக்ஷத்ர (சாற்றுமுறை) வைபவத்தன்று மாலை நடைபெறும் வையாளி ஸேவை ஆகியவை ஒரு தனிப்பட்ட இடத்தைப் பெற்று ஜகத்ப்ரஸித்தத்தை அடைந்துள்ளது என்றால் மிகையாகாது. இவ்வைபவங்களைக் கண்ணாரக் கண்டு கையாரத் தொழுபவர்கள் இனிப் பிறவாதவர்களே. அவ்வளவு அழகு.

**வையாளி வைபவத்தின் சிறப்பு**

இந்த வையாளி வைபவத்தின் சிறப்புக்கு, ஸ்வாரஸ்யமான ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகக் கூறலாம். ஒரு முறை ஸ்வாமி தேசிகன் சாற்றுமுறையன்று, பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் மங்களா சாஸனத்திற்காக சென்னை பெசன்ட் நகரில் உள்ள ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி திருக்கோயிலுக்கு எழுந்தருளியிருக்க, இங்கு மயிலையில் ஸ்வாமி தேசிகன் பத்தி உலாத்தல் முடிந்து வையாளி ஸேவைக்காக தயாராகிக் கொண்டிருக்கும் ஸமயம்.

அர்ச்சாவதார ரஸிகரான ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன், ஏற்கனவே, மயிலை வையாளி ஸேவையின் அத்புதத்தை அறிந்தவர், அன்றைய தினம் அந்த வைபவத்தை அநுபவிக்கத் திருவுள்ளம் கொண்டு, தம்முடைய சிஷ்யர்கள் மூலமாகத் தாம் பெசன்ட் நகரிலிருந்து மங்களாசாஸனத்தை முடித்துக் கொண்டு நடைப்பயணமாக வருவதற்கு சில மணி நேரங்கள் பிடிக்கும் என்றும், அதுவரையில் ஸ்வாமி தேசிகனுடைய வையாளி ஸேவையைச் சற்று மெதுவாக செய்யுமாறும் தெரிவித்து, வையாளி ஸேவையில் தமக்கு உள்ளதான அவாவை வெளியிட்டார். அதன்படி, அன்றைய தினம், ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் எழுந்தருளிய பின்பே, ஒய்யார நடை, வையாளி வைபவங்கள் நடைபெற்றன. ஸ்ரீமதாண்டவன் திருக்கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக அவ்வைபவத்தை அநுபவித்து, ஸ்ரீபாதம் தாங்கிகளை பரிபூர்ணமாக அநுக்ரஹித்தது இன்றளவும் நம் மனக்கண்களை விட்டு நீங்காமலிருகின்றது.

ஸ்ரீமத் அஹோபிலமடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த 45ம் பட்டம் ஸ்ரீமதழகியசி ங்கரும் பலமுறை மயிலை ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாத கைங்கர்ய ஸபையினரைப் பெரிதும் அநுக்ரஹித்துள்ளார் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

இப்படிப் பல மஹான்களுடைய அநுக்ரஹங்களைப் பெற்று ஏற்றத்தை அடைந்தது நம் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாத கைங்கர்ய ஸபை.

இச்சபை, தங்களால் ஸ்ரீபாத கைங்கர்யத்திற்காக பெறப்படும் ஊதியம் மற்றும் ஸபைக்குச் சொந்தமான க்ருஹத்திலிருந்து கிடைக்கக் கூடிய வருமானத்தைக் கொண்டு, மயிலை ஸ்ரீவேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில், கீழ்க்கண்ட உத்ஸவங்களைச் செவ்வனே செய்து வருகின்றது:-

1) ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு வைகாசி ப்ரம்மோத்ஸவத்தில் – ஏழாம் திருநாள் திருத்தேர் உத்ஸவம்.
2) ஸ்வாமி தேசிகனுக்கு புரட்டாசி வார்ஷிக உத்ஸவத்தில் சாற்றுமுறையன்று காலை திருமஞ்சனம் தொடங்கி, மறுநாள் காலை கந்தபொடி வஸந்தம் வரையிலான உத்ஸவம்.
3) திருமயிலையில் அவதரித்த ஆழ்வாரான

மஹதாஹ்வயர் என்னும் பேயாழ்வாருக்கு பத்து நாட்களும் (சாற்றுமுறை உட்பட), மறுநாள் காலை கந்தபொடி வஸந்தம் வரையிலான உத்ஸவம்.

4) ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு – சித்திரை மாதம் நடைபெறும் தோட்ட உத்ஸவம், முதலியவை.

மேற்கூறியவற்றைத் தவிர, இச்சபையினர்:-

1) ''ஸ்ரீ தேசிக மங்களாசாஸனம்'' மற்றும் ''ஸ்ரீ தேசிக ப்ரபந்தம்'' முதலிய அத்புதமான க்ரந்தங்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்.

2) ஸ்வாமி தேசிகனுக்கு என்று தனியாக ஒரு ஆச்சர்யமான கண்ணாடியறை கைங்கர்யம் இச்சபையினரால் செய்யப்பட்டது.

3) ஸ்ரீ பெருமாளுக்கு நித்ய சயானாதிவாஸத் திற்காக, அழகிய, தங்கத்தினாலான சயன மஞ்ச த்தை ஸமர்ப்பித்துள்ளனர்.


4) ஸ்வாமி தேசிகனுடைய 750வது திருநக்ஷத்ரபூர்த்திவைபவ அங்கமாக, கம்பீரமான ஒரு நூதன ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தை உபயமாக ஸமர்ப்பித்துள்ளனர்.

இவை தவிர, 1973ம் வருடம் தொடங்கி ஸ்ரீ தேசிக ப்ரபந்தம், ஸ்ரீ தேசிக ஸ்தோத்ரபாடங்கள், நாலாயிர திவ்யப்ரபந்தம் முதலியவற்றில் மாணவ, மாணவியருக்குப் போட்டிகள் நடத்தி, பரிசுகளும் வழங்கி வருகின்றனர். தவிர, அவ்வப்போது, வித்வான்களைக் கொண்டு உபந்யாஸங்களும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இச்சபையின் ஆரம்பகாலத்திலும், தற்பொழுதும், இதன் வளர்ச்சிக்காக ஏராளமானோர்கள் அரும்பணியாற்றியதன் விளைவாகவும், மற்றும் அவர்கள் தம் உழைப்பாலும், தன்னுடைய 74வது ஆண்டில் அடியெடுத்து வைத்து, இன்றும் இந்த ஸபை கம்பீரமாக நிற்கிறது என்றால் அது மிகையாகாது.

இத் திருக்கோயிலில் 114 வருடங்களுக்கும் மேலாக பாகவத கைங்கர்யத்தில் ஊற்றத்துடன் செயல்படும் ஸ்ரீ வேதபாராயண ஸபையைத் தொடர்ந்து, இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாத கைங்கர்ய ஸபை இன்னும் சில ஆண்டுகளில் தனது சதாபிஷேகத்தைக் கொண்டாடவிருக்கின்றது.

இப்படிப்பட்ட, இந்த ஸபையினருடைய கைங்கர்யம் இடையறாது, மேன்மேலும் சிறப்புடன் நடைபெற, ஸர்வஜ்ஞனான ஸ்ரீ ஸ்ரீநிவாஸனையும், ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயாரையும், நம் ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி தேசிகனையும் ப்ரார்த்திக்கிறோம்.



ஸ்ரீ:

# பாட்டி! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**ஸுமதி:** (ஸேவிச்சுட்டு) Exam-லாம் முடிஞ்சிடுத்து பாட்டி! ஒரு suspense சொல்றேன்-னேளே, இப்போ சொல்றேளா.

**பங்கஜம் பாட்டி:** ஊ...ம்ம்ம்! எதப்பத்தி?

**ஸுந்தரராஜன்:** அதான் பாட்டி! ஸ்வாமி தேசிகன் யாரோட அவதாரம்? என்கிறதப்பத்தி பெரியவாள்-ளாம் பல விதமா அநுபவிக்கறா – அவர் பெருமாள் வேங்கடேசனோ / அவருடைய திருமணியோட அவதாரமோ – அப்படீங்க்றத்துக்கு காரணத்தோட சொன்னேள். ஸ்வாமியை, ஸ்ரீபாஷ்யகாரரோட அவதாரமாகவும் மூணாவதாகச் சொல்லலாம் – அப்படீன்னு, எத வைச்சுசொல்றா?-ன்னா, அடுத்த ச்லோகத்-ல பாக்கலாம்-னு suspense வெச்சுட்டேள்.

**பங்கஜம் பாட்டி:** நன்னா ஞாபகம் வெச்சிண்டிருக்கேளே; ரொம்ப ரொம்ப ஸந்தோஷம். இதுக்கு பதில் சொல்றமாதிரி அமைஞ்ச அடுத்த ஐந்தாவது ச்லோகத்தப் பார்க்கலாம்...

**ஸ்ரீபாஷ்யகார: பந்தாநம் ஆத்மநா தர்சிதம் புந: |**
**உத்தர்த்தும் ஆகதோ நூநம் இத்யுக்தாய அஸ்து மங்களம்||**

**இதுக்கு அர்த்தம்:** ''தான் வெளியிட்ட வேத-நெறிக்குக் கலக்கம் வந்தபோது, தாமே மீண்டும் அதை மீட்டெடுப்பதற்காக புதுப்பிறவி எடுத்தாரோ! என்னும்படி பேசப்படுபவர்க்கு (ஸ்வாமி தேசிகனுக்கு) மங்களம் உண்டாகட்டும்;''

**ஸுந்தரராஜன்:** பாட்டி! நம்ம ஸம்ப்ரதாயத்த 'ராமாநுஜ ஸம்ப்ரதாயம்'-அப்படீன்னுதானே சொல்றோம்! நீங்க இப்போ அதை ''வேத-நெறி'-ன்னு சொல்றேளே; எப்படி?

**பங்கஜம் பாட்டி:** (சிரிச்சிண்டே) இந்த கேள்வியை நீ மட்டும் கேக்கல்லை; பிற மதத்தாரும் கேட்டிருக்கா. இதற்கு பதிலும் நான் சொல்லவேண்டாம்; ஸ்வாமி தேசிகனே ஸாதிச்சிருக்கார்; காட்றேன்ம.



''ஸ்ரீபாஷ்யகாரரின் ஸ்ரீஸூக்திகள், நால் வேதப் பொருளின் சுருக்கமாய்; முனிவர்கள் சொன்ன தத்துவப் பொருள்களை அடியொற்றியதாய்; யுக்திகளுக்கு எல்லை நிலமாய் அமைகின்றன'' எனவும்; ''டங்கர், த்ரமிடர், குஹதேவர் முதலான பெரியோர்களின் கருத்துக்களை அநுஸரித்தே சொல்லப்பட்டன'' எனவும் யதிராஜ ஸப்ததியின் 52–வது / 57–வது ச்லோகத்தில் ஸ்வாமி ஸாதிக்கிறார்.

**ஸுமதி:** பின்ன ஏன் பாட்டி, இந்த ஸித்தாந்தத்துக்கு 'பாஷ்யகாரார் ஸித்தாந்தம்' அப்பிடீன்னு சொல்றா?

**பங்கஜம் பாட்டி:** ஏன்னா, பழமையான இந்த கருத்துக்கள், நாளடைவில மறைஞ்சும், திரிஞ்சும் போயிடுத்து. ஸ்ரீபாஷ்யகாரார் அதை கண்டெடுத்துக் கொடுத்தார். அதனால் பாஷ்யகாரருக்கு பின்

தோன்றிய ஆசார்யர்கள், ‘பாஷ்யகாரர் ஸித்தாந்தம்’ அப்பிடீன்னு பெருமையோடு குறிக்க ஆரம்பிச்சா.

அவரை அடுத்து, ஸ்வாமிதேசிகன் இவற்றை நம் போன்றவர்களுக்கு எளிதில் விளங்கும்படியா வகைப்படுத்தி நிலைநாட்டினார். இதைக் குறிக்கும் வகையில ஸ்வாமியை ‘பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமம்!’ என்ற விருதையிட்டு இன்னிக்கும் அழைத்து, நம்முடைய நன்றியைத் தெரிவிக்கிறோம். இந்த ச்லோகத்திலேயும் இத, ஆத்மநா புந: பந்தாநம் தர்சிதம் அப்படீன்னு சொல்லியிருக்கார்.

**ஸுந்தரராஜன்:** ஸரி பாட்டீ! இதனால, ஸ்ரீபாஷ்யகாரர்தான் தேசிகனாக அவதரித்தார் அப்படீன்றது எப்படிக் கெடைக்கறது.

**பங்கஜம் பாட்டீ:** ரொம்ப ஸூக்ஷ்மமான கேள்வி! மத்த ஸம்ப்ரதாயத்தில, ஒருவர் சொன்ன விஷயத்த அடுத்து வரவா, சிற்சில இடங்கள்ளே மொதல்ல சொன்னவரோட கருத்துக்கள தாங்களே மறுத்துச் சொல்றா – ஏன்னா, அவா ரெண்டு பேரும் வேற-வேற / அவா புத்தியும் வேற-வேற. அதப் பார்த்தா, பாஷ்யகாரர் ஸாதித்த ஒரு விஷயத்தக்கூட ஸ்வாமி தேசிகன் மறுத்தது கெடையாது. இன்னும் சொல்லப்போனா பாஷ்யகாரர், சொல்லிட்டார்-னா அதுதான் ஸரி, appeal-ஏ கெடயாது-ன்னு தேசிகன் வாதிடுவார். இதிலேர்ந்து என்ன தெரியர்து – அவரேதான் இவர்-ன்னு ஏற்படரதோல்யோ!

**ஸுமதி:** ரொம்ப அழகா, எங்களுக்குப் புரியும்படியா சொன்னேள். தேசிகனா அவதாரம் பண்றபோதும், அதே புத்தியும், யோக்யதையும் எப்படி உண்டாச்சு?

**பங்கஜம் பாட்டீ:** பாரேன், நயினாராசார்யர் ஸாமர்த்யத்த; இப்படி கேப்பா அப்படீன்னு எதிபார்த்து, கேக்கும்படியா வைச்சுக்காம, தானே இதுக்கு பதில் சொல்றார் அடுத்த ச்லோகத்தில. இதுதான் அந்த ச்லோகம் ....

**ய: பால்யே வரதார்யஸ்ய ப்ராசார்யஸ்ய பராம் தயாம் |**

**அவாப்ய வ்ருத்திம் கமித: தஸ்மை யோக்யாய மங்களம்||**

**இதுக்கு அர்த்தம்:** ‘‘எந்த மஹாபுருஷர், சின்ன வயஸுலேயே தன் ப்ராசார்யரான ஸ்ரீவரதா சார்யரோட ஒசந்த தயையால் யோக்யதையும் – மேன்மேலும் அதன் வளர்ச்சியையும் - அடைந்தாரோ, அப்படிபட்டவர்க்கு எல்லா க்ஷேமங்களும் உண்டாகட்டும்’’.





**ஸுமதி:** கொஞ்சம் விளக்கமா சொல்றேளா?

**ஸுந்தரராஜன்:** பாட்டீ! எனக்கு இங்கே ஒரு ஸந்தேஹம். தேசிகனுக்கு, நல்ல ஞானம் இருந்ததுக்கு, 'நல்ல குடியிலே பொறந்தார் (அ) பொறக்கும்போதே நல்ல புத்தியோட பொறந்தார் (அ) பெருமாளே அப்படி அநுக்ரஹம் பண்ணார் – இதெல்லாம்தானே காரணம்; பின்ன ஏன் ஸ்ரீவரதா சார்யர் அநுக்ரஹம்- அப்படீன்னு சொல்றேள் ?

**பங்கஜம் பாட்டீ:** கொழந்த! நம்ம ஸம்ப்ரதாயத்துப்படி, 'ஆசார்யரோட அநுக்ரஹத்தாலத்தான் ஒருவனுக்கு அறிவும், யோக்யதையும் உண்டாறது'. வேதப்படி, 'பெருமாள் கிட்ட எப்படி பக்தி செலுத்தறமோ, அதேபோலவே ஆசார்யரிடத்திலும் செலுத்தவேணும். அப்பதான் அவர் சொல்லிக்குடுக்கறதும், ஏன், சொல்லிக்குடுக்கப்போறதும் நமக்கு ஏறும்'.

இதனால என்ன தெரியறது? பெருமாள், எல்லாத்துக்கும் 'பொது காரணம்' தான்; ஆனா, ஞானம் ஏற்படறத்துக்கு ஆசார்யர் 'விசேஷ காரணம்'. இங்கே ஆசார்யர்-னு சொன்னது, ப்ராசார்யருக்கும் – அதாவது, தனது நேர் ஆசார்யருக்கும் - பொருந்தும். ஆக, ஸ்வாமி தேசிகனுக்கு நல்ல ஞானம் உண்டானதுக்குக் காரணம், 'அம்மாள்-னு மரியாதையோடு குறிப்பிடப்படுகிற 'வாத்ஸ்ய வரதாசார்ய'ராகும்.

**ஸுமதி:** பாட்டீ! ஆம்பளையான வரதாசார்யருக்கு ஏன் அம்மாள்-னுபேர்?

**ஸுந்தரராஜன்:** அது போல, அவர், தேசிகனுக்கு அநுக்ரஹம் பண்ணார், அப்படீன்னு எதைவெச்சு சொல்றேள்? அப்ப தேசிகனோட ஆசார்யர் யார்?

**பங்கஜம் பாட்டீ:** அப்பா! ஏகப்பட்ட கேள்விகள் கேக்கறேளே. அவ்வளவு ஸந்தேஹம் வரதா?

**ஸுமதி:** அப்படியில்ல பாட்டீ! ரொம்ப interesting–ங்கா இருக்கு.

**பங்கஜம் பாட்டீ:** கேள்விகள் ரொம்பவோல்யோ! அதனால அப்பறமா சொல்றேன்.

**ஸுந்தரராஜன்:** மறுபடியும் suspense–ஸா; ஸரி, பாட்டீ! (ஸேவிக்கிறார்கள்)

(தொடரும்)

## வைகாசியில் முக்கிய உத்ஸவங்கள்

**ந்ருஸிம்ஹ ஜயந்தி**
மே 17 (வெள்ளி )

**நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்**
மே 18 (சனி)

**கடை வெள்ளிக்கிழமை**
மே 31 (வெள்ளி)

**ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்**
ஜூன் 4 (செவ்வாய்) முதல் 13 (வியாழன்) வரை

**கருட ஸேவை** ஜூன் 6 (வியாழன்)

**திருத்தேர்** ஜூன் 10 (திங்கள்)

**Sponsorships and donations towards publication expenses are welcome**



கங்கை கொண்டான் மண்டபம் - திறப்பு விழா





சித்திரை வெள்ளி
தாயார் கிளி வாஹனம்